செய்தி வெளியீடு எண். 158 நாள். 21.03.2018

**மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள், மாவட்ட அட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., மற்றும் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்சாண்டர் ஆகியோர் 551 பயனாளிகளுக்கு ரூ.273.35 கோடி மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்கள்**

ஆவடி வட்டம், பட்டாபிராம், ஜெயகிருஸ், திருமண மண்டபத்தில், தமிழ்நாடு அரசு நிலவரித் திட்டத்தின் கீழ் திருவள்ளுர் மாவட்ட ஆவடி நகரப் பகுதியில் 551 பயனாளிகளுக்கு ரூ.273.35 கோடி மதிப்பிலான வீட்டுமனைப் பட்டாக்களை மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, கலைபண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு.க.பாண்டியராஜன் அவர்கள், மாவட்ட அட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.அலெக்சாண்டர் ஆகியோர் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சி குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கூறியதாவது :

ஆவடி நகரப் பகுதியில் நிலவரித்திட்டத்தின் கீழ் 462 பயனாளிகளுக்கு ராயத்து புஞ்சை / நஞ்சை / மானாவரி 38.73 ஏக்கர் நிலப்பரப்பிற்கு ரூ. 264.92 கோடியும், கிராம நத்த பட்டா 89 நபர்களுக்கு 1.5 ஏக்கர் நிலம் ரூ.8.43 கோடி மதிப்பிலும் ஆக மொத்தம் 551 பயனாளிகளுக்கு 40.23 ஏக்கர் பரப்பிலான நிலத்திற்கு ரூ.273.35 கோடி மதிப்பில் வழங்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளுர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கெ.ரா.திவ்யஸ்ரீ, ஆவடி நகர நிலவரித்திட்ட தனி வட்டாட்சியர் திரு.எஸ்.டி.வில்சன், வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளுர்.**